## தலைப்பு 220 – ஆயுர்வேத திணைக்களம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆயுர்வேத திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தொழில் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2021 ஆகஸ்ட் 12ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஒக்தோபர் 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்கள் நீங்கலாக, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆயுர்வேத திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமான தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டது.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.2(அ), 1.6.2(ஆ), மற்றும் 1.6.3 ஆம் பந்திகளில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புகளின் பிரகாரம், கடந்த வருடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 நிதி அல்லாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| திறைசேரியின் கணினி அச்சீட்டுக் குறிப்புகளில் மற்றும் சொத்துக்கள் பட்டோலைகளின் பிரகாரம், 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 4,714,733,263 மற்றும் ரூபா 4,771,377,854 ஆன போதிலும், நிதி நிலைமைக்கூற்றின் பிரகாரம் அந்த பெறுமதி ரூபா 3,919,728,286 ஆனமையால் வேறுபாடு முறையே ரூபா 795,004,977 மற்றும் ரூபா 851,649,568 ஆகம் வேறுபாட்டுக்கான காரணத்தை இனங்கண்டு உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த வேறுபாடுகளை இனங்கண்டு, உரிய சீராக்கங்களுக்கான பேரேட்டுக் குறிப்புகள் பொது திறைசேரிக்கு 2021 பெப்ரவரி மாதத்தின் போது சமர்ப்பிக்கப்பட்டது என்பது. | தரவுகளை கணினிமயமாக்குவதற்கு பொறுப்பான அதிகாரிகளின் பயிற்சி மற்றும் கவனத்தை மேம்படுத்துவதன் மூலமும், பிழைகளை சரிசெய்வதற்கான ஒப்பீடுகளை தொடர்ந்து கண்காணித்து மேம்படுத்துவதன் மூலமும் இத்தகைய குறைபாடுகள் தடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே தரப்பட்டுள்ள சில ஆவணங்கள் பேணப்பட்டிருக்காததுடன், சில ஆவணங்கள் முறையாகவும் மற்றும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்காமை மாதிரி கணக்காய்வுப் பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புகள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம், பிணைப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களிடம் பிணை பெற்றுக்கொள்ளப்பட்டு, சரியான பிணைப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படும் என்பது. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடங்கும் வகையில் அரச உத்தியோகத்தர்களின் பிணைப் பதிவேடு பேணப்பட வேண்டும். |
| (ஆ) | இழப்புகள் மற்றும் நட்டங்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன், அது இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இழப்புகள் மற்றும் நட்டங்கள் பதிவேடு நிதிப் பிரமாணம் 110 இன் ஒழுங்குகளின் பிரகாரம் சரியாக இற்றைப்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பிரமாணம் 110 இன் ஒழுங்குகளின் பிரகாரம், அதன் கீழான மாதிரிக்கமைய நட்டங்கள் மற்றும் இழப்புகள் பதிவேடு பேணப்பட வேண்டும். |
| (இ) | நிதிப் பிரமாணம் 1645(அ) இன் பிரகாரம், வாகன சம்பவக் குறிப்பு புத்தகங்கள் நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | சரியாக நாளதுவரையாக்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 1645(அ) இல் காண்பிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், பொது 267 இன் மாதிரிக்கமைய ஒவ்வொரு வாகளம் தொடர்பிலும் வாகன சம்பவக் குறிப்பு புத்தகங்கள் நாளதுவரையாக பேணப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படவேண்டிய சான்றுபடுத்தல்கள்.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2018 இன் 19ஆம் இலக்க தேசியக் கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்கள நிதிக் கட்டுப்பாட்டிற்காக வினைதிறனான உள்ளகக் கட்டுப்பாட்டு ஒழுங்கமைப்பொன்றினைத் தயாரித்து பேணிச் செல்லப்படுகின்றது என்பதனைக் | உள்ளகக் கட்டுப்பாட்டினை உருவாக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்து வேறுபாடுகள் தொடர்பிலும், வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்கள் உள்ளக | 2018 இன் 19ஆம் இலக்க தேசியக் கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த ஒழுங்கமைப்பின் வினைதிறன் தொடர்பாக முன்னர் செய்த மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய ஒழுங்கமைப்பு உற்பத்தித் திறனாக நடாத்தப்பட்டு வருவதற்குத் தேவையான வேறுபாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும் அந்த மீளாய்வுகளை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியினை கணக்காய்வாளருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருப்பினும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதற்கான அறிக்கைகளை கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. | கணக்காய்வாளரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பது. |

### 1.6.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

மாதிரிக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| **அவதானிப்புகள்** | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | | |
| (அ) 1961 இன் 31ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச்சட்டத்தின் 10ஆம் பிரிவு | ஆயுர்வேத மருத்துவமனை, ஆயுர்வேத மருந்து உற்பத்திக்கூடம், ஆயுர்வேத மருந்தகம் அல்லது ஆயுர்வேத மருந்தகம் ஆகியவற்றை நடத்துவதற்கு ஆயுர்வேத ஆணையாளரினால் பதிவு செய்ய வேண்டியிருந்தாலும், பஞ்சகர்மா மற்றும் மசாஜ் மையங்களின் பதிவு தொடர்பான விதிமுறைகளில் பஞ்சகர்மா நடைமுறை சேர்க்கப்படவில்லை. எவ்வாறாயினும், சுதேச | ஆயுர்வேத அதிகாரச்சட்டத்தின் பிரிவு 10 இன் பிரகாரம், ஒரு ஆயுர்வேத மருத்துவமனை, ஒரு ஆயுர்வேத மருந்து உற்பத்திக்கூடம், ஆயுர்வேத மருந்தகம் அல்லது ஆயுர்வேத மருந்துக் களஞ்சியமொன்றை மட்டுமே கண்காணிக்க முடியும் என்பது, மசாஜ் நிலையங்கள் அந்த வகையைச் சேர்ந்தவை அல்ல என்பது மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளரின் | பஞ்சகர்மா மற்றும் மசாஜ் மையங்களை ஒழுங்குபடுத்துவதற்கான முறையான சட்ட கட்டமைப்பை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மருத்துவ அமைச்சின் செயலாளரின் கட்டளையின் அடிப்படையில், ஹோட்டல்களில் நிறுவப்பட்ட 15 ஆயுர்வேத பஞ்சகர்ம நிலையங்கள் மற்றும் 26 பஞ்சகர்மா நிறுவனங்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கட்டளையின் அடிப்படையில், சுற்றுலா சபையின் அங்கீகாரத்துடன் கூடிய ஹோட்டல்கள் மற்றும் ஏனைய சுற்றுலா ஈர்ப்பு நிறுவனங்களுக்காக மாத்திரம் பதிவு அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பது. | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 103 | 6 வாகன விபத்துக்களுக்காக ரூபா 234,281 ஆன இழப்பீட்டு நட்டஈட்டுத் தொகையைப் பெற்றிருந்தாலும், அந்த விபத்துகள் தொடர்பில் மற்றும் 2019 ஆம் ஆண்டில் மத்திய களஞ்சியசாலையில் ஏற்பட்ட ரூபா 314,912 ஆன பற்றாக்குறை தொடர்பான நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | அப்போது திணைக்களத்தில் அனுபவம் வாய்ந்த நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் இல்லாதிருந்த காரணத்தினால் இவ்வாறான குறைபாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 371(2) | பெற்றுக்கொள்ளப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி பணி நிறைவடைந்ததும், உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 42 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,290,003 ஆன செயல்நிமித்த உப கட்டுநிதி மற்றும் எஞ்சிய தொகையை தீர்ப்பனவு செய்வதங்கு 1 முதல் 06 மாதங்கள் | தீர்ப்பனவு உறுதிச்சீட்டுக்களின் குறைபாடுகள், பட்டியல்களின் பிரதிகளை பெறுவதில் தாமதம், பணி மாறுதல முறையில் வருகைதரல், வெளி மாகாணங்களில் வவுச்சர்கள் தபால் மூலம் பெறுதல் மற்றும் கோவிட் தொற்றுநோய் நிலைமை போன காரணங்களால் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயல்நிமித்த உப கட்டுநிதி நிர்வகிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வரையான காலம் எடுத்திருந்தது. மேலும், 0 உத்தியோகத்தர்களுக்கு 09 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 132,575 ஆன உப கட்டுநிதி உரிய பணிக்காக பயன்படுத்தப்படாது, 03 முதல் 30 நாட்கள் வரையான காலம் கையிருப்பில் வைக்கப்பட்டு மீள செலுத்தப்பட்டிருந்தது. | செயல்நிமித்த உப கட்டுநிதியை உரிய திகதியில் தீர்க்க முடியாது என்பது, உண்மையான குறுக்கீட்டை சரியான நேரத்தில் தீர்க்க முடியவில்லை, ஏனெனில் ஊழியர்கள் அதிகாரிகள் மட்டுப்படுத்தப்பட்டதால், ஒவ்வொரு அதிகாரிக்கும் பல சந்தர்ப்பங்களில் முன்பணம் வழங்க வேண்டியிருந்தது. அதற்கு முன் மற்றொரு நிலுவைத் தொகையை வழங்க வேண்டும் என்றும், இதுவரை நிலுவைத் தொகையை செலுத்தாத அதிகாரிகளுக்கு அடுத்த சம்பளத்தில் இருந்து நிலுவைத் தொகையை வசூலிக்குமாறும் அறிவுறுத்தினார். | |
| (இ) | 2019 ஏப்ரல் 16 ஆம் திகதியிலான இலக்கம் 09/2019 கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 2(iv) ஆம் பந்தி | நேரத்தின் அடிப்படையில் மேலதிக நேரம் மற்றும் விடுமுறை ஊதியம் செலுத்துவதற்கு உரிய காலம் கைவிரலடையாள இயந்திரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றாலும், கைவிரலடையாள இயந்திரத்தினை பயன்படுத்தாமல் வருகை ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே மேலதிக் நேரம் மற்றும் விடுமுறை ஊதியமாக செலுத்தப்பட்ட மொத்த தொகை மற்றும் தொடர்புடைய | 2020ஆம் ஆண்டு கைவிரலடையாள இயந்திரங்கள் பொருத்தப்பட்ட போதும், சுகாதார அமைச்சில் கைவிரலடையாள இயந்திரங்கள் பயன்படுத்தப்படாததால் திணைக்களத்தில் கைவிரலடையாள இயந்திரங்களைப் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை என சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளமை, 2021 ஏப்ரல் 01 ஆம் திகதி கைவிரலடையாள இயந்திரத்தின் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பொறுப்புகளின் கூட்டுத்தொகை ரூபா 56,045,639 ஆகும். | அடிப்படையில் மேலதிக நேர கொடுப்பனவை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டது ஆனால் அதற்கு அமைச்சின் செயலாளரின் அனுமதி வழங்கப்படவில்லை என்பது, கோவிட் தொற்றுநோய் முடியும் வரை கைவிரலடையாள இயந்திரத்தைப் பயன்படுத்தாது இருக்குமாறு முன்னாள் பதிற்கடமை ஆயுர்வேத ஆணையாளர் குறிப்பிடப்பட்டுள்ளமை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

நிதிப்பிரமாணம் 50 இல் காண்பிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய இராஜாங்க அமைச்சிற்காக சரியான மற்றும் நடைமுறைச் சாத்தியமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது பின்வரும் அவதானிப்புகளுக்கமைய உறுதிப்படுத்தப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம், மீண்டெழும் செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்த ரூபா 10,365,000 ஆன ஒட்டுமொத்த நிதியேற்பாடும் எஞ்சியிருந்தது. | போதிய கட்டுப்பணம் கிடைக்காமையால் ரூபா 10.8 மில்லியன்னான பொறுப்புகளை தீர்க்க முடியாதுள்ளமையால் மொத்த நிதியேற்பாடும் எஞ்சியுள்ளமை. | துறையின் பங்கு மற்றும் முந்தைய ஆண்டுகளின் செலவினப் போக்குகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு போதிய ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு ஒவ்வொரு பாடம் தொடர்பான செலவினங்களையும் நிர்வகிக்க வேண்டும். |
| (ஆ) | 5 மீண்டெழும் செலவின விடயங்களுக்கு உரிய ரூபா 117,470,000 தொகையான நிதியேற்பாடு இல்லாதிருந்த காரணத்தால் ரூபா | 2020 ஆம் ஆண்டுக்கான ஏற்பாடுகளில் இருந்து 2019 ஆம் ஆண்டிற்கான பொறுப்புகள் தீர்க்கப்படுவதால், 2020 ஆம் ஆண்டிற்கான | நிதியேற்பாடுகளை விழஞ்சி செலவினம் மேற்கொள்வதற்கு மற்றும் கடப்பாடுகளுக்கு கட்டுப்படுவதற்கு விதிமுறைகள் |

| | | | |
|---|---|---|---|
| | 10,365,000 ஆன தொகை நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்டு ரூபா 127,234,335 தொகை செலவிடப்பட்ட பின்னர் ரூபா 10,732,636 ஆன பொறுப்புகளுக்கும் கடப்பட்டிருந்தது. மேலும், 4 மீண்டெழும் செலவின் விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 57,200,000 ஆன நிதியேற்பாடுகளில் ரூபா 56,893,462 தொகை செலவிடப்பட்டதன் பின்னர் ரூபா 4,662,484 ஆன கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்த சேவைகளுக்கான கடமைகளுக்கான ஏற்பாடுகளை நிர்வகிக்க முடியாது எனவும், 2020 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்ட போதிலும் ஒதுக்கீடுகள் குறைவாகவே இருந்ததாகவும், ஊழியர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அமைச்சின் செயலாளரினால் நிதியேற்பாட்டு எல்லை பற்றி விசாரிக்காமல் மேலதிக நேர கொடுப்பனவுகளுக்கு அனுமதிக்கப்பட்ட நேரத்திற்கும் மேலாக அனுமதித்துள்ளமையால் இந்த கடப்பாடுகள் ஏற்பட்டுள்ளது என்பது. | இல்லாததால் நிதிக் கட்டுப்பாடு முறையாகச் செயல்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | ஒரு மூலதனச் செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,000,000 மொத்த ஒதுக்கீடு, அந்தச் செலவுப் விடயத்தின் நோக்கத்திற்காகச் செலவிடப்படுவதற்குப் பதிலாக வேறொரு செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | கைதடி வைத்தியசாலைக்கு Edge Runner இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கான மொத்த ஒதுக்கீடும் கிடைக்காத காரணத்தால் ரூபா 1,000,000 சேமிக்கப்பட்டது என்பது மற்றும் கோவிட் தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் தொடர்பாக புதிய இயந்திரங்கள் கொள்முதல் செயல்முறை ஆரம்பிக்கப்படாமையால் இந்த சேமிப்பு ஏற்பட்டது என்பது. | திணைக்களத்தின் வகிபாகம் மற்றும் முந்தைய ஆண்டுகளின் செலவினப் போக்குகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு போதுமான ஒதுக்கீடுகள் செய்யப்பட வேண்டும் மற்றும் ஒவ்வொரு விடயத்திற்கும் தொடர்புடைய செலவினங்கள் நிர்வகிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மூலதனச் செலவின விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா | கோவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக புதிய | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | 13,500,000 ஆன நிதியேற்பாட்டில் 75 சதவீதத்திற்கும் அதிகமான அதாவது ரூபா 10,200,000 தொகை அந்தச் செலவின விடயத்தின் நோக்கத்திற்காக செலவழிக்காமல் ஏனைய செலவினப் விடயங்களுக்கு மாற்றப்பட்டது. மேலும் 4 மூலதனச் செலவுப் விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 3,670,000 ஆன நிதியேற்பாட்டில் ரூபா 2,030,875 தொகையான நிதியேற்பாடு 50 முதல் 94 சதவீத வரம்பில் எஞ்சியிருந்தது. | செயற்திட்டங்கள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை என்பது மற்றும் பள்ளிகள் மற்றும் முன்பள்ளிகள் மகப்பேறு மற்றும் குழந்தை ஊட்டச்சத்து திட்டங்களை ஒழுங்கமைக்க முடியாமை, பெறுகைக்கு முன்னர் ஆணத்தமாகும் செலவின விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 10,200,000 நிதியேற்பாட்டில் பணிகள் நிறைவு செய்யப்பட்ட செயற்திட்டத்திற்கான பட்டியல்களின் நிலுவைத் தொகையைத் தீர்ப்பதற்காக மாற்றப்பட்டது என்பது மற்றும் பொதுச் செலவினங்களை ஒப்பந்தம் செய்து நிர்வகிக்க இயலாமையால் தொடர்புடைய நிதியேற்பாடுகள் எஞ்சியிருந்தன. | |
| (உ) | 04 மூலதனச் செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 39,530,000 ஒதுக்கீடுகளில் 30 சதவீதம் அல்லது ரூபா 10,153,301 உத்தேசித்த நோக்கத்திற்காக செலவிடப்படாமை காரணமாக, ஒவ்வொரு செலவின விடயத்திலும் சேமிப்பு சதவீதம் 24 சதவீதம் முதல் 48 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது. மேலும் இரண்டு செலவின விடயங்களின் நிதியேற்பாடுகளின் 18 சதவிகிதம் மற்றும் 35 சதவிகிதமாக மொத்தம் ரூபா 5,309,940 தொகை | கோவிட் தொற்றுநோய் காரணமாக ஒப்பந்தப் பணிகளை மேற்கொள்ள இயலாமை, அத்தியாவசிய பழுதுபார்ப்பு இல்லாமை, அனுராதபுரம் சமூக சுகாதார மேம்பாட்டு சேவையின் இலக்கிடப்பட்ட செயற்திட்டங்கள் மட்டுப்படுத்தப்படல் போன்றவற்றின் காரணமாக இந்த சேமிப்பு ஏற்பட்டிருந்தமை மற்றும் அந்த வருடத்தில் எதிர்பாராதவாறு ஒரு மில்லியன் குடும்பங்களை மேம்படுத்துவதை | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | உத்தேசித்த நோக்கத்திற்காக செலவிடப்படாது மாற்றப்பட்டிருந்தது. | அரசாங்கம் முன்னுரிமையாகக் கண்டறிந்துள்ளதால் அதற்கு தேவையான நிதியேற்பாடுகளும், தேவைக்கேற்ப அவசர பழுதுபார்ப்பு மற்றும் நிலுவைத் தொகையைத் தீர்ப்பதற்குத் ஒக்கீடுகள் மாற்றப்பட வேண்டியிருந்தமை. | |
| (ஊ) | மூலதன செலவின விடயங்களான பதவியணி பயிற்சி செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 150,000 ஆன நிதியேற்பாட்டில் ரூபா 146,000 செலவிடப்பட்டமையின் பின்னர் ரூபா 1,405,000 ஆன கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | கடந்த காலத்தில் நிறுவனத்திற்கு எதுவித ஒருங்கிணைப்பு இல்லாத முதுகலை பட்டப்படிப்புகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை, அந்த ஒப்புதலின் அடிப்படையில் ஆயுர்வேத மருத்துவர்களால் பாடநெறிக் கட்டணத்தை சொந்த பணத்தில் திருப்பிச் செலுத்துவதற்கான மீளளிப்பு உறுதிச்சீட்டுகளை வழங்குவார்கள் என்பது, அதற்கேற்ப ஒதுக்கீட்டு வரம்பை மீறிய பொறுப்புகள் உள்ளன என்றும், 2021 ஆம் ஆண்டில் பெறப்படும் ஒதுக்கீட்டின் அடிப்படையில் பொறுப்புகள் தீர்க்கப்பட்டது என்பது. | முறையான திட்டமிடல் மூலம் ஊழியர் பயிற்சி போன்ற மூலதனச் செலவினங்களை எளிதாக மதிப்பிட முடியும் என்பதால் மனிதவள மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கி அதற்கான நிதியேற்பாடுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.2 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 94(1) இன் ஏற்பாடுகளுக்கு முரணாக 11 மூலதன மற்றும் | ஊழியர்களின் வேண்டுகோளின் பேரில் அமைச்சின் | நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்படலாகாது. |

| | | | |
|---|---|---|---|
| | மீண்டெழும் செலவின விடயங்களின் ரூபா 912,544 ஆன சேமிப்பினை விஞ்சி ரூபா 15,929,736 ஆன பொறுப்புகளுக்கு கடப்பட்டிருந்த காரணத்தால் மேலும் ஒரு மூலதன செலவின விடயத்திற்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டிராத போதிலும், ரூபா 200,401,423 ஆன பொறுப்புகளுக்கு கடப்பட்டிருந்தன. | செயலாளரினால் மேலதிக நேர கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்ட மணித்தியாலத்தை அதிகரிக்க ஒப்புதல் வழங்கப்பட்டதால் இந்தக் கடப்பாடுகள் ஏற்பட்டிருந்தன என்பது, 2019 ஆம் ஆண்டிற்கான கட்டுப்பணம் கிடைக்காமையால் ரூபா 200,401,423 ஆன பொறுப்புகள் 2020 ஆம் ஆண்டிற்கு முன்கொண்டு வரப்பட்டது மற்றும் 2021 ஆம் ஆண்டில் இதற்காக பெறப்பட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் அந்த கடப்பாடுகள் தீர்க்கப்பட்டன என்பது. | |
| (ஆ) | இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடமிருந்து கடந்த வருடங்களில் பெறப்பட்ட மருந்துகளுக்கு ரூபா 1,253,831 தொகையும், மீளாய்வாண்டில் பெறப்பட்ட மருந்துகளுக்கு ரூபா 2,319,362 தொகையும் செலுத்த வேண்டியுள்ளதாக அந்த கூட்டுத்தாபனத்தின் கணக்குகளின்படி பணம் செலுத்துவது உறுதி செய்யப்பட்ட போதிலும், அந்த பெறுமதிகள் கடமைகள் மற்றும் பொறுப்புகள் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை. | ஆயுர்வேத திணைக்களத்தின் வழங்கல் பிரிவு அந்தந்த மருத்துவமனைகளின் தேவைக்கேற்ப கட்டளைகளை பிறப்பித்த போதிலும், அந்த கட்டளைகள் தொடர்பான அனைத்து மருந்துகளும் அந்தந்த மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும் என்பது மற்றும் மருத்துவமனைகள் தாமதமாக வவுச்சர்களை தயாரித்து அனுப்பினால் அதை பொறுப்புகள் பட்டியலில் சேர்க்க முடியாது என்பது. | அனைத்து கடமைகள் மற்றும் பொறுப்புகள் கடமைகள் மற்றும் பொறுப்புகள் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். |

## 2.3 முற்பணக் கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண பீ கணக்கில் இணக்கக்கூற்றின் பிரகாரம், 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக 39 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட 5 வருடங்களை விஞ்சிய கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1.65 மில்லியனாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது 5 வருடங்களை விஞ்சிய கடனிலிருந்து முறையே ரூபா 587,450 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.<br>இடமாற்றம் பெற்றுச்சென்ற, மரணமடைந்து, பணி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் அறவீடு மிகவும் நலிவான மட்டத்தில் காணப்பட்டது. | மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டு 05 வருடங்களுக்கு மேலாக பதவியில் இருக்கும் உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தமது நிறுவனங்களிடம் நிலுவைகள் இல்லை என அந்த மாகாண சபைகளினால், அத்தகைய கடன் மீதிகள் தொடர்பில் 1/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மரணித்த உத்தியோகத்தரிகளின் மொத்த கடன் மீதி ரூபா 290,100 ஆவதுடன், இதில் ரூபா 114,550 இறப்பு கருணைத் தொகையில் இருந்து மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது,<br>ஓய்வுபெற்ற 05 ஆண்டுகளுக்கும் மேலான உத்தியோகத்தர்களின் கடன்கள் 20 முதல் 30 வருடங்கள் பழமையானவை என்பதால் அவற்றை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பது,<br>05 வருடங்களுக்கு மேலாக சேவையில் இருந்து விலகிய உத்தியோகத்தர்களின் | 2021 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை சமர்ப்பிக்கும் முன், பதிலில் குறிப்பிட்டுள்ள படி தொடர்புடைய தீர்ப்பனவுகள் நிறைவு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கடன் மீதி ரூபா 847,760 இலிருந்து ரூபா 13,200 அறவிடப்பட்டுள்ளமை மற்றும் மிகுதியை மற்றும் 05 வருடங்களுக்கு மேலாக இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் மீதித் தொகை ரூபா 192,960 தொடர்பில் அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 1/2020 இன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2001 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை அனுராதபுரம் மாவட்டத்தில் ஆயுர்வேத சமூக சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தை முன்னோடி திட்டமாக நடைமுறைப்படுத்த அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன், இத்திட்டத்தின் வெற்றி குறித்து மதிப்பீடு செய்து, அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்ற பின்னர், 2005 ஆம் ஆண்டு இத்திட்டம் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு செயல்படுத்தப்பட இருந்தது. ஆனால் அவ்வாறு செய்யாமல் அநுராதபுரம் மாவட்டத்தில் மாத்திரம் கடந்த 15 வருடங்களாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. 2005 ஆம் ஆண்டு முதல் கடந்த வருடம் வரை ரூபா 608 மில்லியன் செலவிடப்பட்டிருந்த இத்திட்டத்திற்காக மீளாய்வாண்டிற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 142.71 மில்லியன் தொகையில் 225 | இது தொடர்பில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் ஏனைய மாவட்டங்களுக்காக சேவைகளை விரிவுபடுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். |

உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா 133.72 மில்லியன் தொகையும், ஏனைய செலவினங்களுக்கான ரூபா 4.14 மில்லியன் என மொத்தமாக ரூபா 138 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.
ஏனைய மாவட்டங்களுக்கான சேவைகளை விரிவுபடுத்துவது தொடர்பில் 2005 ஆம் ஆண்டு அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை சமர்ப்பித்திருந்த போதிலும் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மதவாச்சி சிறுநீரக வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்காக 2014 ஆம் ஆண்டு பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கு 85,372,218 ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது. 2019 டிசம்பரில் கட்டுமானம் முடிந்த பிறகு உபரி கொள்முதல் காரணமாக மீதமுள்ள ரூபா 1,683,644 பெறுமதிமிக்க கட்டிடங்கள் பொருட்கள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டன. ஆனால், எஞ்சியிருந்த இரும்புக் கம்பிகள், பெறுமதிமிக்க மரக்கட்டைகள் உள்ளிட்ட பல கட்டுமானப் பொருட்கள் பாதுகாப்பின்றி, விதிமீறல், செயல்படாமல் துறை வளாகத்தில் ஓராண்டுக்கும் மேலாக குவிக்கப்பட்டுள்ளன. | இது தொடர்பில் பிரதம கணக்காளர் கட்டிடப் பொருட்களை ஏலம் விடுவதற்கு பலமுறை முயற்சிகளை மேற்கொண்டிருந்த போதிலும் அமைச்சின் செயலாளரின் தலையீட்டினால் ஏலம் நிறுத்தப்பட்டது என்பது. | தொழில்நுட்ப அறிவு கொண்டவர்களால் தயாரிக்கப்பட்ட முறையான செலவு மதிப்பீடுகளின்படி தேவைக்கேற்ப மட்டுமே கட்டுமானப் பொருட்களை வாங்க வேண்டும். அரசாங்கத்திற்கு ஏற்படும் இழப்பைக் குறைக்கும் விதத்தில் மற்றும் வெளிப்படையான தன்மையுடன் கொள்முதல் செயல்முறைக்கு ஏற்ப செயலிழந்த சொத்துகளை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| தேவையை சரியாகக் கண்டறியாமல் மற்றும் ஒரு சாத்தியக்கூறு ஆய்வு இல்லாமல் 2015 மார்ச் 16 ஆந் திகதி ரூபா 28 மில்லியன் செலவிடப்பட்டு பண்டாரநாயக்க ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 14 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்திருந்ததுடன், அதில் ரூபா 21 மில்லியன் பெறுமதியான 8 இயந்திரங்கள் 2021 ஆம் ஒக்டோபர் 15 ஆம் திகதி வரை நிறுவப்படவில்லை. மொத்த கிரயம் ரூபா 14,591,311 ஆன 06 இயந்திரங்கள் உற்பத்திற்கூடத்திற்கு தேவைப்படாது என 2020 அக்டோபர் 05 அன்று நியமிக்கப்பட்ட குழுவால் கண்டறியப்பட்டது. முறையான ஒப்பந்த உடன்படிக்கைக்கு மற்றும் சேவை மற்றும் பழுதுபார்த்தல் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளாமல் இந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதால், மீளாய்வாண்டில் நிறுவப்பட்ட இயந்திரங்களும் பழுதடைந்த நிலையில் இருந்தன. இதன்படி இத்திட்டத்திற்கு செலவிடப்பட்ட மொத்த தொகையான ரூபா 28,342,712 சிக்கனமற்ற செலவினம் ஒன்றாகும். | நாவின்ன ஆராய்ச்சி நிறுவனத்தில் உள்ள இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சின் செயலாளர் நிபுணர்கள் குழுவிற்கு பணிப்புரை விடுத்துள்ளமையால், அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து இயந்திரங்களையும் திறம்பட பயன்படுத்த அல்லது ஆயுர்வேத மருத்துவமனைகள் அல்லது ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தில் மருந்துகள் தயாரிப்பில் பயன்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் மற்றும் தேவையை சரியாகக் கண்டறியாமல், முறையான சாத்தியக்கூறு ஆய்வு செய்யாமல் இந்த கொள்முதல் செய்த அனைத்து அலுவலர்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2020 டிசம்பர் 31 இல் உள்ளபடியாக, திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட | உயர் மட்டப் பதவிகளில் எஞ்சியுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பது, | உயர் மட்டப் பதவிகள் மற்றும் மருத்துவமனையின் அத்தியாவசிய பதவிகளுக்கு முன்னுரிமையளித்து, |

பதவியணியினர் 2,647 ஆக இருந்தபோதிலும், அத்திகதியில் உள்ளபடியான பதவியணியினர் 1,679 ஆனமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 968 ஆகவும் இருந்ததுடன், இது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களில் 37 சதவீதத்திற்கு சமனாகும். அவற்றுள் பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் ஆயுர்வேத போதனா வைத்தியசாலையில் முறையே 140 மற்றும் 385 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், திணைக்களத்திற்குச் சொந்தமான 8 மூலிகைத் தோட்டங்களில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 01 முதல் 35 வரையான வீச்சில் காணப்பட்டது.

88 சிறப்பு மருத்துவ உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் 14 உத்தியோகத்தர் மட்டுமே தகுதி பெற்றுள்ளமை, பண்ணை முகாமையாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு ஏற்ப விண்ணப்பங்களை கோர உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பது, ஆரம்பத் தர மருத்துவ உத்தியோகத்தர் பதவிகளுக்கான 157 வெற்றிடங்கள் இதுவரை நிரப்பப்பட்டுள்ளது என்பது, நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் அரச முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் அமைச்சினால் நிரப்பப்படும் என்பது, தாதியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு போதிய விண்ணப்பங்கள் திணைக்களத்திற்கு கிடைக்காததால், சுகாதார அமைச்சுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள தாதியர்களில் குறிப்பிட்ட சதவீதத்தை ஆயுர்வேத திணைக்களத்துடன் இணைக்குமாறு கோரப்பட்டுள்ளது என்பது, ஆயுர்வேத சேவை உதவியாளர் வெற்றிடங்களை நிரப்ப நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளது என்பது, மருந்து கலப்பவர் போன்ற வெற்றிடங்கள் சேவை உதவியாளர் பதவியில் பதவி உயர்வு என்பதால், சேவை உதவியாளர் வெற்றிடங்களை நிரப்பாமல் அந்த வெற்றிடங்களை நிரப்ப முடியாது என்பது, மூலிகைத் தோட்டங்களில் தற்போதுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி கோரப்பட்டுள்ளது என்பது.

தேவையை உரிய முறையில் இனங்கண்டு வெற்றிடங்களை துரிதமாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.